# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 41/6 — 1973 ජනවාරි 11 වැනි බ්‍රහස්පතින්ද — 1973.01.11

41/6 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 11 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் யாக்கங்கள் செய் சட்டம்**

33 ஆம் பிரிவின்படியான கட்டளை

கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சர் ரிக்கிரி பண்டா சுபசிங்கா ஆகிய யான் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் யாக்கங்கள் செய்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, மேற்போந்த செய்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்படி விடுக்கப்பெற்று, 1958 ஒகத்து 1 ஆம் தேதிய, 11,466 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பெற்ற கூட்டிணைவுக் கட்டளைப்படி தாபிக்கப்பெற்ற இலங்கை மட்பாண்ட யாக்கத்தின் பொருட்டு, கிழ்வரும் பட்டோலையில் விவரிக்கப்பெற்றுள்ள காணி ஈட்டப்படுவதை இக்கட்டளையின் மூலம் அங்கிகரிக்கின்றேன்.

ரி. பி. சுபசிங்க,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 9 ந உ.

பட்டோலை

1. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளைப் பகுதி அரசிறை உத்தியோகத்தரின் பகுதியில், புரிச்சலைக் கிராம சேவகரின் பகுதியில் அமைந்துள்ளதும், வரகந்தைத் தொகுப்புக்குரிய வரகாமுரைப் பகுதி எனப் பெறுவதுமான காணியுள் ஏறத்தாழ மூன்று ஏக்கர் (3ஏ.–0று.–0பே.) பரப்பளவு உடையதும், இல. 45, இராணி வீதி, கொழும்பு ஐச் சேர்ந்த வரைவுபெற்ற ஜோர்ஜ் ஸ்ருவட் கம்பனியாரால் நிருவகிக் கப்பெறும் வரைவுபெற்ற வரகந்தை (இலங்கை)த் தோட்டம் கம்பனியாரால் உரித்துக் கோரப் பெறுவதும், பின்வரும் எல்லைகளை உடையதுமான காணித் துண்டமும் அதில் உள்ள கட்டங்களும் :—

வடக்கு : உடுப்பிகில்லேயிலிருந்து வரகமுரை வரை செல்லும் கிராமச்சங்க வீதி ;
கிழக்கு : தோட்ட வீதி ; அதே காணியின் சொச்சம் ;
தெற்கு : அதே காணியின் சொச்சம் ;
மேற்கு : அதே காணியின் சொச்சம் ; கலங்கொடையிலிருந்து செல்லும் கிராமச் சங்க வீதி ;

2. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளைப் பகுதி அரசிறை உத்தியோகத்தரின் பகுதியில், புரிச்சலைக் கிராகம சேவகரின் பகுதியில் அமைந்துள்ளதும், வரகந்தைத் தொகுப்புக்குரிய வரகமுரைப் பகுதி எனப்பெறுவதுமான காணியுள் ஏறத்தாழ 10 பேர்ச்சு (0ஏ.0று. 10பே.) பரப்பளவு உடையதும், இல. 45, இராணி வீதி, கொழும்பு 1 ஐச் சேர்ந்த வரைவுபெற்ற ஜோர்ஜ் ஸ்ரூவட் கம்பனியாரால் நிருவகிக்கப்பெறும் வரைவுபெற்ற வரகந்தை (இலங்கை)த் தோட்டக் கம்பனியாரால் உரித்துக் கோரப் பெறுவதும், பின்வரும் எல்லைகளை உடையதுமான காணித் துண்டமும் அதில் உள்ள கட்டங்களும் :

வட மேற்கு : அதே காணியின் சொச்சம் ;
வட கிழக்கு : அதே காணியின் சொச்சம் ;
தென் கிழக்கு : அதே காணியின் சொச்சம் ;
தென் மேற்கு : தோட்ட வங்களாவரை செல்லும் தோட்ட வீதி.

1–785

## விலைக் கட்டளைகள்

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

உணவுவிலைக் கட்டளை 522

**கோதுமை மா**

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவும் நானாவிதப் பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவும நானாவிதப் பொருட்களும்) விலைக் கட்டுப்பாட்டதிகாரி ஜவன் சமரவிக்கிரம ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1971 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் திகதி வெளியான 14,984/4 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை யில் பிரசுரமான 1971 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் திகதியைக் கொண்ட சி 507 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடு கிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2ம், 3ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்,

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்றாக பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, “ இறுத்தல் ” அல்லது “ இறு. ” என்பது அவோர்டுபோய்ஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால், ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2ம், 3ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

வில்பிறட் ஜயசூரிய,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்).

1973 ம் ஆண்டு சனவரி மாதம் 11 ம் திகதி.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| விபரம் | 150 மொத்த நிறை அல்லது 148 நிகர இறுத்தல் கோதுமை மாவின் உச்ச மொத்த விலை | ஒரு நிகர இறுத்தலின் உச்ச சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| கோதுமை மா .. .. .. .. | 54 70 .. | 0 38 |

**குறிப்பு.**—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை உச்ச விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

1–786/1

---

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

4 ம் பிரிவின் கீழ் கட்டளை

உணவு விலைக்கட்டளை இல : 523. **சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச்சீனி**

**173** ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவும் நானாவிதப் பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவும் நானாவிதப் பொருட்களும்) பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி வில்பிறட் ஜயசூரிய ஆகிய யான் இக்கட்டளையால் :—

(1) 1972 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ம் திகதி கொண்ட 38/6 ம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1972 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ம் திகதிய சி 520 ம் இலக்கக் கட்டளையை 11/12 ம் திகதி அதியாமம் தொடக்கம் அமுலாகும்படி ரத்துச்செய்கிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2ம், 3ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக இலங்கைத்தீவகத்துள் விற்றலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும், ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்ருகப் பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால், ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2ம், 3ம், பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள் கலம் எதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

வில்பிறட் ஜயசூரிய,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானுவிதப் பொருட்களும்).

1973 ம் ஆண்டு சனவரி மாதம் 11 ம் திகதி.

அட்டவணை

| பத்தி (1) விபரம் | பத்தி (2) ஒரு மொத்த அந்தருக்கு ஆகக் கூடிய மொத்த வியாபார விலை ரூ. ச. | பத்தி (3) ஒரு நிகர இருத்தலுக்கு ஆகக் கூடிய சில்லறைவிலை ரூ. ச. |
|---|---|---|
| (அ) சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச்சீனி .. | 163 80 | 1 50 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

1–786/2

---

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

உணவு விலைக் கட்டளை 521 பாண்

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினுல் (உணவும் நானுவிதப்பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு (உணவும் நானுவிதப்பொருட்களும்) பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி வில்பிறட் ஜயசூரிய ஆகிய நான் இக்கட்டளையால் :—

(i) 1971 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் திகதி வெளியான 14,984/4 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1971 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் திகதியைக் கொண்ட சி. 508 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(ii) 8 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணையோ 16 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணின் பகுதியையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து, இவ்வட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளிற் குறிப்பிடப்பட்ட விலைகளையே 1 ம் பந்தியால் விபரிக்கப்பட்டிருக்கும் இடப்பரப்பில் விற்கக்கூடிய ஆகக்கூடிய விலையாகவும் விதிக்கிறேன்.

(iii) 8 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாண் துண்டையோ 8 அவுன்சுக்கு மேலான நிறையைக்கொண்ட பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து 16 அவுன்சு பாணுக்குக் கணக்கிடப்பட்ட ஆகக்கூடிய விலையின் விகிதத்திற் கேற்பக் கணிக்கவேண்டுமென இக்கட்டளையால் ஆஞ்ஞையிடுகிறேன்.

(iv) இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்சு நிறையையோ 8 அவுன்சுக்குக் கூடாத நிறையைக் கொண்ட பகுதியையோ எவ்விடத்திலாவது, 8 அவுன்சு நிறையைக் கொண்ட பாணின் விலையின்படி கணக்கிடப்பட்ட விலைக்குக் கூடுதலாக அவ்விடப்பரப்பில் விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(v) இக்கட்டளையின் நோக்கத்திற்காக குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விதிக்கப்படும் பொருள்களைச் சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vi) இக்கட்டளையில் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் பாணைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப் பாட்டில் எவ்விடத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்திற்கு விதிக்கப்பட்டுள்ள பாணின் ஆகக்கூடிய விலையைக் குறிக்கும் விளம்பரம் ஒன்றை மக்களின் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் பாண் விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;
(ஆ) விற்ற பாணின் விபரம் ;
(இ) விற்ற பாணின் தொகையும் ;
(ஈ) விற்ற பாணிற்குக் கொடுக்கப்பட்ட விலையும் ;

(viii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "அவுன்சு" அல்லது "அவு." என்பது "அவோர்டுபோசு" எடுத்தலளவை முறையின் பிரமாண அவுன்சு நிறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

வில்பிறட் ஜயசூரிய,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்).

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ம் திகதி.

அட்டவணை

| பந்தி 1<br>இடப்பரப்பு | பந்தி 2<br>8 அவுன்சுக்குக் கூடுதலான நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | பந்தி 3<br>8 அவுன்சும் அதற்குக் குறைந்த நிறையுமுள்ள பாணின் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| கொழும்பு மாநகரப் பகுதி .. .. .. .. | 0 38<br>(16 அவுன்சுக்கு) | 0 19<br>(8 அவுன்சுக்கு) |

குறிப்பு.—இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறித்த விலைக்குத்தான் விற்கப்பட வேண்டுமென்று கருதப்படவில்லை ; இவைகள்தான் ஆகக்கூடிய விலையெனவும் இவற்றிற்குக் கூடுதலாக விற்கப்படக்கூடாதெனவும் கொள்ளப்படவேண்டும்.

1–786/3

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.